சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | விஜயபாலன் |
| தந்தை பெயர் | : | கண்ணன் |
| கிராமம் | : | விடையல் கருப்பூர் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 39 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா-1 அபிக்கண்ணன்

என்பவரை தெரியும். ஆஜர்எதிரிகளை தெரியும். சுமார் 8 மாதங்களுக்கு முன்பாக நான் நன்னிலம் போலீசார் காவல் நிலையம் வழியாக சென்று கொண்டிருந்த போது கருப்பூர் பேருந்து நிலையம் அருகில் வரும்போது நன்னிலம் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ஒரு கையொப்பம் கோட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். என்ன எதற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா-1 அபிக்கண்ணன் என்பவருக்கும் எதிரிகளுக்கும் என்னை பிரச்சனை என்பது எனக்கு தெரியாது. சம்பவ இடத்தை பார்வையிட்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. படம் வரைந்தார்களா என்றால் அதுவும் எனக்கு தெரியாது.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 04.01.2025 ஆம் தேதி அ.சா-1 அபிக்கண்ணன் கொடுத்த புகாரின் பேரில் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கருப்பூர் மெயின் ரோட்டில் உள்ள பேருந்து நிலையத்தில் மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் ஒன்று தயார் செய்தார் என்றும், அதில் நானும் கருணாகரன் என்பரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், சம்பவம் பற்றி எனக்கும் கருணாகரன் என்பவருக்கும் தெரியும் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பார்வை மகஜரில் என்ன எழுதி இருக்கிறது என்று தெரியவில்லை என்றும் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. இது சம்மந்தமாக நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.16 17:47:24 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.